## வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வரையில் இயக்க

# மீதமுள்ள 7 மெட்ரோ ரயில்கள் மார்ச் மாதத்திற்குள் சென்னை வரும்

சென்னை, டிச.22: சென்னையில் 45.1 கி.மீ தூரத்திற்கு வண்ணாரப் பேட்டை வரையில் மெட்ரோ ரயில் முதல் திட்டம் செயல்பட்டு வருகிறது. மெட்ரோ ரயில் சேவையை நாள்தோறும் 1 லட்சம் பேர் வரையில் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரையில் 9.1 கி.மீ தூரத்திற்கு திட்டத்தை நீட்டிக்கும் பணிகள் நடந்து வருகிறது. தற்போது, 80 சதவீதம் பணிகள் முடிவடைந்துள்ளன.

மேலும், நீட்டிப்பு வழித்தடத்தில் இயக்குவதற்காக 10 புதிய மெட்ரோ ரயில்களை பெங்களூர் ஸ்ரீ சிட்டில் உள்ள ஆல்ஸ்டாம் ரயில்பெட்டி தயாரிப்பு நிறுவனத்திடம் மெட்ரோ ரயில் நிர்வாகம் ஆர்டர் செய்தது.

## அதிகாரி தகவல்

அதன்பேரில், இதுவரையில் 3 ரயில்கள் கோயம்பேடு பணிமனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அங்கு, முழுமையான பாதுகாப்புடன் ரயில் பெட்டிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2020 மார்ச் மாதத்திற்குள் மீதம் உள்ள 7 மெட்ரோ ரயில் பெட்டிகளை முழுமையாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்திற்கு கொண்டுவரும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில்வே அதிகாரி ஒருவர் கூறியதாவது:

நீட்டிப்பு வழித்தடத்தில் இயக்குவதற்கான 7 மெட்ரோ ரயில்கள் முழுமையான தரப் பரிசோதனை செய்யப்பட்டு, அதிவேகத்தில் இயக்கி பார்க்கப்பட்டு, தன்னிறைவு பெற்ற பின்னரே சென்னைக்கு கொண்டுவரப்படும்.

பின்னர், ஏப்ரல் மாதத்தில் இவ்வழித்தடத்தில் சோதனை ஓட்டத்தை நடத்த மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. அதிகாரிகளின் சம்மதம் பெற்ற பின்னரே நீட்டிப்பு சேவை வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். ஜூன் மாதத்தில் மெட்ரோ ரயில் சேவையை இவ்வழித்தடத்தில் கொண்டுவர நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு கூறினார்.